# கரூர் மாவட்டக் கோயில் கல்வெட்டுகளில் பாண்டியர் கால நிர்வாகக் கொடைகள்

12

**வீ.கோவிந்தராஜ்,**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்),**
**தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
**கோயம்புத்தூர்.**

**ஆய்வுச் சுருக்கம்:**

கரூர் மாவட்டத்தில் கொங்கு பாண்டியர்கள் 12 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்துள்ளனர். அவர்கள் ஊர்களை உருவாக்கி மக்களைக் குடியமர்த்தனர். தன்னுடன் பணியாற்றும் அமைச்சர்கள், படை வீரர்கள் ஆகியோர்களுக்கும் வீடுகளை உருவாக்கிக் கொடுத்தனர். அவர்களுடன் மக்களும் அரச நிர்வாகத்தின் உறவினர்களும் வந்து காட்டை அழித்து மண்ணைச் சமன் செய்து வீடுகளை உருவாக்கினர். குடியிருப்புகளை அடையாளப்படுத்தவும் நிர்வாகத்தில் பதிவு செய்யவும் பெயர்களைச் சூட்டினர். அப்பெயர்கள் அவர்கள் வழிபடும் தெய்வங்கள், அரசர்கள், நிலப்பரப்புகள் ஆகியவற்றின் பெயரால் அமைந்தன. கொங்கு பாண்டியர்கள் காலத்தில் இருந்த வாழ்விடப்பகுதிகள் இன்று கோட்டை மேடுகளாக, நத்தக்காடுகளாக, குட்டைக் காடுகளாக உள்ளன. முந்தைய மக்கள் வாழ்ந்த ஊர்களில் செக்குகள், பானை ஓடுகள், இரும்புக் கற்கள் ஆகியவை உள்ளன. அவை முந்தைய பாண்டியர்களின் எச்சங்களாக அமைந்துள்ளன. பாண்டியர்கள் அருகில் உள்ள கோயில்களில் விளக்கு எரிக்கவும் நீர்நிலைகள் அமைக்கவும் கோயில்களில் பூசைகள் புரிந்து வரும் பிராமணர்களுக்குச் சதுர்வேதிமங்கலங்கள், பிரம்மதேயங்கள், இறையிலி ஆகியவற்றை வழங்கியுள்ளனர். அவற்றை ஆவணப்படுத்தும் விதமாகக் கல்வெட்டுகளில் வடித்தனர். அதில் உள்ள கொடைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** கரூர், பாண்டியர்கள், வேட்டமங்கலம், கொடைகள், கல்வெட்டு, இளமாடம், ஏழு குரால்பசு, கல்யாண விகிர்தீசுவரர், திருப்பணி, எல்லை, தோட்டம், உறுதிப் பிரமாணம், தேவகன்மி, எழுதகம், புங்கம்பாடி, வரிகள், வெங்கல நாடு

## முன்னுரை

பாண்டியர்களின் தலைநகரம் மதுரை மாநகரமாக இருந்தாலும் சேர நாட்டின் தலைநகரமாகவும் கொங்கு நாட்டின் வணிக நகரமாகவும் உள்ள கருவூரில் வணிகத்திலும் கோயில்கள் கட்டுமானப் பணிகளிலும் பாண்டியர்கள் ஈடுபட்டுள்ளனர். பாண்டியர்கள் கருவூரில் நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர். சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் ஏற்பட்ட போர், பாண்டியர்களுக்கும் சேரர்களுக்கும் ஏற்பட்ட போர் இவற்றின் காரணமாக வெற்றி, தோல்வி, படையெடுப்பு, ஆட்சி மாற்றம் ஆகியவை

நடைபெற்றுள்ளன. பாண்டியர்களின் கடைசி அரசரான சந்திரசேகர பாண்டியர் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் ஆண்டிப்பட்டிக் கோட்டையில் உள்ள பொம்மய நாயக்கருக்குச் சில நிலங்களைத் தானமாக வழங்கி அவரைப் பாளையக்காரராக நியமித்தார். கொங்கு நாட்டில் கரூர் முக்கியமான நகரம் ஆகும். இங்குச் சிவபிராமணர்களும், செட்டிகளும் காணியாளர்களாக இருந்தனர். அப்போது சேர,சோழ, பாண்டிய அரசர்களின் காரியக் காரர்கள் கொங்கு நாட்டுக் குடிகளையும், சிவபிராமணர்களையும் செட்டிகளையும் மிகவும் கொடுமைப்படுத்தினர். இவர்கள் பாண்டிய அரசரிடம் முறையிட்டனர். பாண்டிய அரசர் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காக்காவாடி நல்லண கவுண்டரை அனுப்பி கொடுமை செய்தவர்களை வெட்டி வீழ்த்தி வருமாறு கட்டளையிட்டார். இந்த வேலையைச் சரியாகச் செய்ததால் காக்காவாடி நல்லண கவுண்டர் சுந்தரபாண்டியனிடம் பட்டங்கள்,வெகுமதிகள் பெற்று பட்டக்காரர்கள் ஆனார். இவரைப் போன்று நிமிந்தபட்டியில் இருக்கும் நீலியப்பகவுண்டரும் அப்பகுதியில் கொடுமை செய்து வந்தவர்களை வெட்டி வீழ்த்தி வெங்கல நாட்டின் பட்டக்காரர் ஆனார். வெங்கல நாட்டின் அமராவதி நதியின் தென்கரையில் நல்லண கவுண்டரும், வடகரையில் நிமிந்தபட்டி நீலியப்பகவுண்டரும் பட்டக்காரர் ஆனார்கள். கரூர் மாவட்டத்தில் கொங்கு பாண்டியர்களின் ஆட்சியில் கோயில்களில் கல்வெட்டுகள் நிறைய பொறித்துள்ளனர். இவர்களுடைய கல்வெட்டுகள் வேட்டமங்கலம் புஷ்பவனேசுவரர் கோயில், வெஞ்சமாங்கூடலூர் கல்யாண விகிர்தீசுவரர் கோயில், கரூர் பசுபதீசுவரர் கோயில் ஆகிய கோயில்களில் பாண்டியர் காலக் கொடைகள் இடம் பெற்றுள்ளன.

**வேட்டமங்கலம் புஷ்பவனேசுவரர் கோயில் கல்வெட்டு**

கரூர் மாவட்டம் கரூர் வட்டம் வேட்டமங்கலம் புஷ்பவனேசுவரர் கோயிலில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரபாண்டியனின் 6 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இடம் பெற்றுள்ளது. கோயிலின் முன் மண்டப வடபுறச் சுவரில் ஊராரும் அரையர்களும் புஷ்பவன ஈசுவரேசுவரர் கோயிலுக்கு நிலமும் கிணறும் நீர் வார்த்துக் கொடுத்தது பற்றியும் அந்நிலத்திற்கான எல்லைகளும் இக்கல்வெட்டில் குறித்துள்ளனர். முதலில் மங்கலச் சொல் இடம் பெற்றுள்ளது. வேட்டமங்கலம் என்ற ஊர் கொங்கு 24 நாடுகளில் கிழங்கு நாட்டில் அமைந்துள்ளதைக் குறிக்கிறது. முன்மண்டபத்தை இளமாடம் என்று கல்வெட்டு குறிக்கிறது. புஷ்பவனமுடையார் எங்களூர் நாயனார் என்று கல்வெட்டில் குறிக்கின்றனர். அரையர்கள் நீர் வார்த்துக் கொடுத்த நிலம் கீழ்பாற்கெல்லை தண்ணிக்கிணற்று இட்டேரிக்குத் தென் இட்டேரிக்கு மேற்கு, தென்பாற்கெல்லை பூருவஞ் சோழன் மனைக்கு வடக்கு, மேற்பாற்கெல்லை குடுமிசிறுவன் தரைக்குக் கிழக்கு, வடபாகற்கெல்லை கழுப்பகள் தோட்டத்துக்குத் தெற்கு இந்த நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலமும் கிணறும் நீர்வார்த்துக் கொடுத்ததாகக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.**(ஸ்ரீதர்.தி.ஸ்ரீ(பதிப்பாசிரியர்); தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி**

**3,பக்கம் 125)**

வேட்டமங்கலம் புஷ்பவனமுடையார் கோயிலில் வீரபாண்டியனின் 11+1 ஆவது ஆட்சிக் காலத்தில் 13 ஆம் நூற்றாண்டில் திருச்சுற்றின் கிழக்குப்பக்கத்தில் இருக்கும் தூணில் ஒரு கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் இக்கோயிலுக்கு அளித்த கொடையைப் பற்றிக் கூறுகிறது. சக்கரவர்த்திகள் வீரபாண்டிய தேவற்கு என்று கல்வெட்டு தொடங்குகிறது. கல்வெட்டில் எதிராம் ஆண்டு இடம் பெற்றுள்ளதால் ஒரு ஆண்டு கூட்டப்பட்டுள்ளது. தண்டீஷ்வரன் ஓலை காத்தான் தாபரகாத்தான் பாதம் திறம்பல் சென்னிமேல் வைத்து கிழங்கு நாட்டு வேட்ட மங்கலத்து மன்றுப் பிச்சாந்திரிகளும் என்று கல்வெட்டு வரிகள் இடம் பெற்றுள்ளன. பன்மாகேஸ்வரரும் ஆக நாற்பத்தெண்ணாயிரம் என்று கல்வெட்டு வரிகள் முற்றுப் பெறாமல் எழுத்து சிதைந்து காணப்படுகின்றன. இக்கல்வெட்டில் ஓம்படைக் கிளவியாகக் கங்கைக் கரையில் ஏழு குரால் பசு வதித்த பிரமத்யா தோசத்துக்குக் கடவானாக என்று இடம் பெற்றுள்ளது. மேலும் ஸ்ரீமாகேஸ்வர வீரபத்ர கைய்யால் கொன்ற சூழ் வையத்து தண்டீசுவரன் கரும்மாராய்க பண்டே அறஞ்செய்தான் இவ்வூர் புஷ்பவனமுடைய நாயனார்க்குப் பல மண்டலத்து ஆட்டைக்கு முப்பது பணம் திருப்பணிக்கு உடலாகக் கொடுத்தோம் இவ்வறம் அழித்தார் உண்டாகில் கெழுக்கக் கடவாராகவும் கம்பம் பிள்ளை இந்நாயனாருக்குக் கொடுனலேன் உபயம் என்று கல்வெட்டில் பொறித்துள்ளனர். **(மேலது,பக்கம் 132)**

**வெஞ்சமாங்கூடலூரில் சுந்தர பாண்டியர் கல்வெட்டு**

இக்கல்வெட்டு கோச்சடை பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு என்று தொடங்குகிறது. இவரது நான்காவது ஆட்சி ஆண்டில் புரட்டாசி மாதம் உடையார் வெஞ்சமாங்கூடல் ஆளுடைய நாயனார் கோயிலில் நடைபெற்ற நிகழ்வைக் குறித்து இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஆளுடைய நாயனார் என்பது கல்யாண விகிர்தீசுவரர் இறைவனைக் குறிக்கிறது. ஆதிசண்டேசுர தேவகன்மிகளுக்குத் தென்கரை மரை நாட்டுத் தலையூர் நாட்டு அரையர்கள் பிரமாணம் பண்ணிக் கொடுத்த பரிசாவது என்று கல்வெட்டு விவரிக்கிறது. பிரமாணம் என்பது உறுதிமொழி அளிக்கப்பெற்ற சான்று ஆகும்.இந்த இறைவனுக்குக் கோயில் திருப்பணிக்கும் திருநாள் படிக்கும் திருக்கண்ணப்ப நாயனாரைப் பூசிக்கும் எங்கள் நாட்டுக்கு என்று இக்கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளனர். காளஹஸ்தியில் இருந்து தமிழகத்தில் குடியேறிய வேட்டுவக் குடியினர்களைக் குறிக்கிறது. அடைப்பான் பாப்புத்துறை தேவதானமாக இந்நாள் முதல்வகை என்பது எல்லைக் காவலில் இருந்து குடிமக்களைப் பாதுகாப்பவர்கள் என்பது பொருள் ஆகும். தேவதானம் என்பது இறையிலி நிலம், வரி இல்லாத நிலம் ஆகும். கொண்டு அனுபவிப்பார்களாகவும் அனுபவிக்கும் இடத்து நிலத்தின் நான்கு எல்லைகள் கணக்கிடப்பட்டுள்ளன. இவ்வூர் நான்கு எல்லைக்கு உட்பட்ட நத்தமும் குளமும் குளப்பிரிப்பும் நன்செய், புன்செய் மேனோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. மற்றும் எப்பேர் பட்டனவும் பற்றி அனுபவிப்பாராகவும் இவ்வூர் கடமை வறகம உப்பாயம் திருவாசல் விநியோகம்

திருமுகச் சம்படம் என்கடமை கூற்று வரி தெரி எருது குற்ற தெண்டம் மற்றும் எப்பேர் பட்டனவும் கைக்கொண்டு சந்திராதித்தவரையும் தேவர்தானமாகச் செல்வதாகச் செம்பிலும் சிலையிலும் வெட்டி நான்கு எல்லையிலும் திருச்சூலத் தாபனம் பண்ணிக் கொள்வாராகவும் இப்படி சம்மதித்து உறுதிமொழி அளித்துள்ளனர். ஆதிசண்டேசுவர தேவகன்மிகளுக்கு இத்தலையூர் நாட்டு அரையர்கள் புலப்பர்கள் இளமாடத்தோம் இப்படிக்கு இவை தலையூர் அரையர்களில் பாணி பெருமாள் சோழனான சுந்தரபாண்டியச் சோழகோன் எழுத்து இப்படிக்கு இவை தலையூர் நாட்டு வேளான் எழுத்து ஆகியவை இடம் பெற்றுள்ளன.**(ARE 148/1905)** சந்திராதித்தவர் என்பது சந்திரன், சூரியன் உள்ளவரை ஆகும். இறுதியில் வன்மாகேஸ்வர ரட்சை இடம் பெற்றுள்ளது. எழுத்து ஒப்பந்தம் இட்டவர்கள் அதிகாரிகளாகப் பணி புரிந்தவர்கள். இதனை எழுதியவர்கள். தலையூர் நாட்டு அரையர்கள் என்று இதில் குறிக்கப்படுவது சுந்தரபாண்டிய தேவரால் பட்டக் காரராக, அரண்மனையாளராக நியமிக்கப் பெற்ற வள்ளல் கவுண்டன் வம்சாவழியினர் ஆவர். இவர்கள் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் புங்கம்பாடியில் வசிப்பவர்கள். தேவகன்மிகள் என்பவர் கோயில்களில் இறை பணிகளைச் செய்பவர்கள். சாமி காரியங்களைப் பார்த்துக் கொள்பவர்கள். கோயில் அதிகாரிகள் ஆவர். அரசன் தேவகன்மிகளுக்கு நிலத்தைக் கொடுத்து விடுவார். அங்குள்ள தேவகன்மிகள் வரி வருவாயைக் கையாள்வார்கள்.

அடுத்ததாக உள்ள இக்கல்வெட்டு செண்டேசுவர ஓலை தாபரஞ்சூள என்று தொடங்குகிறது. கோச்சடப்பன்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் சந்தரபாண்டிய தேவர்க்கு ஒன்றாவது கற்கடக நாள் கிழமையும் பெத்த திருஓண சதயநாள் வெங்கால நாட்டில் உள்ள கல்யாண விகிர்தீசர் கோயிலில் சிவதவனப் பெருமாள், திருவாலந்துரை உடையான், மாகேசுவர பிரயனுக்குக் காணி ஓலை பிரமாணம் பண்ணிக்கொடுத்த பரிசாவது இன்னாயினார் கோயில் கணக்கு காணியும் இவ்வூர்களில் கோயில் கணக்கு காணிகளும் இவ்வூர்களில் நஞ்சை புஞ்சை நத்தம் நத்தப்பாளுங் காடு பட்டி தோட்டம் மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு மனை மனைப்பிளைக் கிடை மற்றும் நம் கன்மிகள் அனுபவிக்கும் பட்டிகள் அனுபவிப்பானாகவும் அனுபவிக்கும் இடத்து இவனுக்கு மனையாவது இவ்வூர் திருமட வளாகத்து கீழ்திருவீதிக்கும் மேற்கும் குலோத்துங்கச் சோழப்பட்டன் மனைக்குக் கிழக்கும் அஞ்சூறத்து பட்டன் மனைக்கும் தெற்கு வடக்கு திருவீதிக்கி வடக்கும் இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட மனையும் புளக்கடையும் அனுபவிப்பானாகவும் இந்தப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வானாகவும் ஒப்பம் என்று இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.**(SITI 734)** இக்கல்வெட்டில் நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. உறுதிச் சான்று எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**வீரபாண்டிய தேவர் கல்வெட்டு**

இக்கல்வெட்டு கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு என்று தொடங்குகிறது. இவரது மூன்றாவது ஆட்சி ஆண்டில்

திருவெஞ்சமாங்கூடல் கல்யாண விகிர்தீசுவரர் கோயிலுக்குத் தம் பிராட்டியார் பண்ணேர்மொழியம்மை கோயில் அர்த்தமண்டபம் வியாளம் ஆகப்படை எழுதகம் கபௌதம் வியாளம் ஆகப்படை நாகம்பாகக் கல்லும் திருமவந்தியாகவும் தட்டோடும் இடுவித்து தளமும் இசைப்பிச்சென் சுந்தரபாண்டிய தேவனான கண்டிய தேவர் செய்வித்த தன்மம் சகத் கோபாலன்உ என்று இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. வியாளம் என்பது கோயில் சுவர்களில் பொறிக்கப்படும் யாளியின் வடிவம் ஆகும். எழுதகம் என்பது சித்திர வேலையில் ஒன்று ஆகும். தூணின் அடிக்கல் அமைப்பது ஆகும். கபோதகம் கல்வெட்டில் கபௌதகம் என இடம் பெற்றுள்ளது. சிற்ப உறுப்புகளில் ஒன்று ஆகும். **(ARE 150/1905)**

அடுத்த கல்வெட்டு வெங்கால நாட்டில் திருவெஞ்சமாங்கூடல் கல்யாண விகிர்தீசருக்குக் கோயில் தானத்தாருக்கு இந்த நாயகனாருக்கு ஆளும்படி உள்ளட்டு வென்றும் வெஞ்சனங்களுக்குப் பூரட்டாதி திருநாளுக்கு அமுதுபடி சாத்தும்படி உள்ளிட்டு என்று கல்வெட்டு தொடங்குகிறது. வென்றும் வெஞ்சனங்களுக்கும் இக்கோயில் கண்டிய தேவர் எழுந்தருளுவித்த சண்டேசுவரருடைய நாயகனாருக்கு அமுதுபடிக்கு ஆண்டு 15 ஆவது மாசி மாதம் முதல் இன்னாட்டு மங்கலமான பாண்டி தேவருக்கு நல்லூரைத் தேவதானமாகக் கொடுத்துள்ளனர். இன்னாள் முதல் இவ்வூர் நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட நிலமும் நஞ்சை, புஞ்சை, நத்தம், தோட்டம்,குளம், குளப்பரப்பு ஆகியவை உள்ளிட்ட நிலத்தில் பழந்தேவதானம் பண்ணின நிலத்துக்கு ஒட்டச்சு ஆராச்சி நத்த வரியும் மண்டல முதலையும் விக்குறக பொறும் முதலெழுத்து விநியோகம் எலவை புகவை காலிங்கராயன் விநியோகமும் வாசல் விநியோகமும் பண்ணப்பட்ட விநியோகமும் ஒலைச்சம்பட வெளைக்காரன் களக காறன் சிறுக்காரன் நதிகைப் பிடியும் சிமான் மகமையும் நல்லெருது நல்பசுவும் காணம் நெய் எண்ணெயும் உப்பு ஆயமும் தரியரை சைக்கரை திட்டட்டெலிப் பாட்டம் புஞ்சையான கானம் கிளிரை தொல்லொட்டு ஒட்டடு வரி குத்தம் தொண்டம் யெப்பேர்பட்ட அனித்த ஆதாயமும் முதல் அடங்க இறையிலியாகக் கொடுக்கப்பட்டது. இப்படி நான்கு எல்லையிலும் திரிசூல ஸ்தாபனம் பண்ணி சந்திராதித்தியர் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க. இவை ழாயங்குடியான் எழுத்து, ஆண்டு ஏழாவது வாரமாக இவை வாசவராயன் எழுத்து ஒப்பம் செய்யப்பட்டுள்ளது. இறுதியில் பன்மாகேஸ்வர ரக்ஷை என்று முடிந்துள்ளது. **(SITI 732)**

**குலசேகரப் பாண்டியன் கல்வெட்டு**

கோமாறவர்மன் என்ற அடைமொழிப் பெயர் அரசனுக்கு உள்ளது. குலசேகரப் பாண்டியனின் நான்காவது ஆட்சி ஆண்டில் வைகாசி மாதம் திருவெஞ்சமாங்கூடலூர் கல்யாண விகிர்தீசுவரர் கோயில் ஆதி சண்டேசுவர தேவர்களுக்குக் கோயில் கணக்கு ஸ்ரீகாரியம் செய்வார்க்கு விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்த செய்தி இடம் பெற்றுள்ளது. தட்டையூர் நாட்டு நெடுநாள் பாழ்பட்டுக் கிடந்த நத்தம்ம பூத்துரை செல்லசான கண்ணப்ப நல்லூருக்கு எல்லை துரையூருக்கு வடக்கு இந்நான்கு எல்லையும் எல்லைக்கு உட்பட்ட நிலமும் நஞ்சை புஞ்சை நத்தம் குளம் குளப்பரை கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய மரம் இதில் எப்பேர்பட்ட வரியும் மண்டல முதல் மகமை கற்றுக வரியும் பேறு முதல் எடுத்து விநியோகமும் இலவை உகவையும் அனி இவொன வரியும்

வேலைக்காரன் கார்த்திகைப் பிடியும் சுங்கம் மகமை இங்கு முதல் சாதி வரியும் நல்லெருது நல்பசு காணம் நெய் எண்ணை உப்பாயம் தரியிரை தட்டொலிப் படம் புன்செய் பாணமும் கிளிரை தொலெட்டு மன்றுபாடு தெண்டம் குத்தம் எப்பேர்பட்டதும் வரிகளும் வைகாசி மாதம் தேவதானம் இரையிலியாகத் தரப்பட்டது. இப்படிக்கு இந்நான்கு எல்லையிலும் உண்டானதுக்கு கல் நாட்டித்தச் சந்திராதித்தியர் வரையில் செல்வதாக என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளக் கூறுகிறது. இவை களப்பராயன் எழுத்து, காலிங்கரயன் எழுத்து என இருவர் கையொப்பம் இட்டுள்ளனர். கல்வெட்டின் இறுதில் பன்மாகேஸ்வர ரட்சை என்று இடம் பெற்றுள்ளது. **(SITI 733)**

**தொகுப்புரை**

கரூர் மாவட்டத்தில் பாண்டியர்கள் கோயில் திருப்பணிகள் மேற்கொண்டுள்ளனர். பாண்டியர்கள் கொடுத்த கொடைகளை வேட்டமங்கலம், வெஞ்சமாங்கூடலூர் கோயில் கல்வெட்டுகளில் காணலாம். கரூர் மாவட்டக் கல்வெட்டுகளில் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகரப் பாண்டியன் காலக் கொடைகள், நிலம் நான்கு எல்லைகள், தேவகன்மிகள், இறையிலி ஆகியவை குறித்த செய்திகள் பொறிக்கப்பட்டுள்ளன.

**துணை நூல் பட்டியல்**


1. இராசு.செ; கொங்கு நாட்டுப் பட்டக்காரர்களும் பாளையக்காரர்களும், கொங்கு ஆய்வு மையம், ஈரோடு. 2022.
2. இராசகோபால்.சு (ப.ஆ); ஆவணம் இதழ் – 11, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 2000.
3. இராமலிங்கம்.பெ; திருவெஞ்சமாக்கூடல் வரலாறு,கற்பகம் பதிப்பகம், கரூர்,2003.
4. கோவிந்தராஜ்.வீ; பழநாகம்பள்ளி மகாபலேசுவரர் கோயில் வரலாறு, அரவக்குறிச்சி, கரூர். கோயில் கும்பாபிசேக வெளியீடு, 2023.
5. ஸ்ரீதர்.தி.ஸ்ரீ(பதிப்பாசிரியர்); தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி 3, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை. 2010.